## பிப்ரவரி - 19

**"சுத்தமுள்ளவர்களுக்குச் சகலமும் சுத்தமாயிருக்கும்; அசுத்தமுள்ளவர்களுக்கும் அவிசுவாசமுள்ளவர்களுக்கும் ஒன்றும் சுத்தமாயிராது; அவர்களுடைய புத்தியும் மனச்சாட்சியும் அசுத்தமாயிருக்கும். அவர்கள் தேவனை அறிந்திருக்கிறோமென்று அறிக்கை பண்ணுகிறார்கள், கிரியைகளினாலோ அவரை மறுதலிக்கிறார்கள்; அவர்கள் அருவருக்கப்படத்தக்கவர்களும், கீழ்ப்படியாதவர்களும், எந்த நற்கிரியையுஞ்செய்ய ஆகாதவர்களுமாயிருக்கிறார்கள்." - தீத் 1 : 15, 16**

எவ்வளவு பயங்கரமான நிலைமை இது! சுத்தமான இருதயத்தையும் சுத்தமான மனதையும் உடையவர்களாயிருக்கிறது மட்டுமல்லாமல், கர்த்தரின் வார்த்தையோடு நெருக்கமான இசைவுடனே தங்களுடைய மனச்சாட்சியை மிகவும் மென்மையாக வைத்துக்கொள்ளவும், கர்த்தருடைய ஜனங்கள் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற திட்ட அளவாகிய அவருடைய அன்பின் பிரமாணத்தினால், கண்டிப்பாயும், அடிக்கடியும் நம்மை நாமே நிதானித்து அறிவதின் மூலமாக இந்த நிலைமையை தொடர்ந்து நிர்வகிக்கலாம். "பெருமையின் அல்லது அதிகப்பிரியமான ஆசையின் முதல் நெருக்குதலை உணரவும், அலைந்து திரியும் என் மனதைப் பிடித்து நிறுத்த, கோபமூட்டும் அக்கினியை அவித்துப்போடவும் நான் விரும்புகிறேன்."

**- Z ’99, 214 (R 2516).**

ஒருவனுடைய இருதயத்தின் இயற்கையான குணம் அவன் தொடர்புகொள்ளும் ஒவ்வொன்றையும் அதுவாகவே பற்றிக் கொள்ளுகிறது. தான் நல்லவனாகவோ அல்லது தீயவனாகவோ இருக்கிற பிரகாரம் அவனுக்கு அது நன்மையாகவோ அல்லது தீமையாகவோ இருக்கிறது. சுத்தமாக இருக்கிறவர்கள் தாங்கள் தொடர்புகொள்ளும் எதையும் சுத்தமாக்குகிறார்கள். அதே சமயம் அசுத்தமுள்ளவர் தாங்கள் தொடர்புகொள்ளும் எதையும் அசுத்தப்படுத்துகிறார்கள். அவர்களுடைய நல்நடத்தைக்குரிய தனிமையில் வித்தியாசம் இருப்பதினால், இது வேற்றுமையான உலகமாக இருக்கிறது. ஒரு தடவை தேவனுடையவனாக இருந்த ஒருவன் அசுத்தனாகிவிட்டால், அவன் ஒருபொழுதும் சுத்தமாக இல்லாத ஒருவனைவிட அதிகமாகக் கறைபடுகிறான். அவனுடைய வாழ்க்கை அசுசிப்படுத்தப்பட்டிருக்கிறது. **- P ’36, 14.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

மத் 15:11; லூக் 11:39-41; அப் 10:15,28; ரோம 14:14,17,20,23; 1கொரி 6:12;10:23-25; 1தீமோ 5:8; 2தீமோ 3:5; எபி 6:4-8; 10:26-31; 2பேது 2:20-22; 1யோவா 5:16; யூதா 11-13;

**கோபுர வாசிப்பு : Z ’15, 245 (R 5746).**

**வினாக்கள்** : நான் இந்த வாரத்தில் துணிகரப் பாவங்களிலிருந்து என்னைக் காத்துக்கொண்டேனா? அதில் உதவியாக இருந்ததும் இடையூறாயிருந்ததும் எவை? பலாபலன் என்ன?